# In the Court of the District Munsif, Eraniel

**Original Suit No. 32/2022** **Date:13.02.2026.**

**(PW1)- ராதகிருஷ்ணன்**

**4 ஆம் பிரதிவாதி** தரப்பு குறுக்கு விசாரணை தொடர்ச்சி

1. நான் தாக்கல் செய்துள்ள வா.சா.ஆ.3 பட்டாவில் கிளிமானுர் மட வகைக்கு வேண்டி ஸ்டேன்லி தனிஸ்லாஸ் என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். வா.சா.ஆ.4 ஆவணத்திலும் கிளிமானுர் மட வகைக்கு என்று தான் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். தனிஸ்லாஸ் மகன் ராபர்ட் சிங் எனக்கு மிகவும் வேண்டிய நபர் என்றால் சரிதான். வா.சா.ஆ.6 பிரமாண பத்திரம் வழக்கிற்க்கு வேண்டிய போலியாக தயார் செய்யப்பட்டது என்றால் சரியல்ல. வா.சா.ஆ. 7 ஆவணமும் வழக்கிற்காக பொய்யாக தயார் செய்யப்பட்டது என்றால் சரியல்ல. நான் தாக்கல் அனைத்து ஆவணங்களும் வழக்கிற்காக பொய்யாக தயார் செய்யப்பட்டு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றாலும் மேற்படி ஆவணங்களும் வழக்கிற்க்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்றாலும் சரியல்ல.

2. வா.சா.ஆ.9 மற்றும் 10 ஆவணங்களில் குறிப்பிட்டுள்ள சங்திகள் பொய்யானது என்றால் சரியல்ல. வா.சா.ஆ 12, மற்றும் வா.சா.ஆ. 13 எதிர்வழக்குரையில் குறிப்பிட்டுள்ள சங்கதிகள் யாவும் உண்மை என்றால் சரியல்ல. வா.சா.ஆ. 14 முதல் 16 வரை ஆவணங்கள் அ.சா.எண் 318/1995 வழக்கு தள்ளுபடி உத்தரைவ ரத்து செய்ய போடப்பட்ட மனு என்றாலும் மேற்படி மனு தள்ளுபட செய்யப்பட்டு மேற்படி தள்ளுபடி உத்தரவை ரத்து செய்ய கேட்டு போடப்பட்ட மனுவும் தள்ளுபடி செய்யப்பட்டுவிட்டது என்றாலும் சாட்சி பதில் அளிக்காமல் அமைதியாக உள்ளார். நான் தாக்கல் செய்துள்ள ஆவணங்கள் எதுவும் தாவா சொத்து எனது அனுபவத்தில் இருப்பதை காட்டாது என்றாலும் அனைதும் வழக்கிற்காக உற்பத்தி

செய்யப்பட்டது என்றால் சரியல்ல.

3. சார்பு நீதிமன்றம் அ.வா.எண். 399/2018 வழக்கில் கோரியுள்ள அதே பரிகரத்தை தான் அதே சங்கதிகளுடன் இந்த வழக்கிலும் கோரியுள்ளேன் என்றாலும் எனவே நான் கேரியயுள்ள பரிகாரம் கிடைக்கதக்கது அல்ல என்றால் சரியல்ல. வா.சா.ஆ.2 ஆவணப்படி 4ம் பிரதிவாதி கிரயம் பெற்று தற்போதும் தாவா சொத்தை அனுபவத்தி வருகிறார் என்றால் சரியல்ல. நான் கோரியுள்ள பரிகாரம் கிடைக்கத்க்கது அல்ல என்றால் சரியல்ல.

(ஒப்பம்)

மாவட்ட உரிமையியல் நீதிபதி,

இரணியல்.